1994 மார்ச் 22]

வினா எண் *64*, திரு. வே. தம்புசாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

64-

திருவாரூர்—திருத்துறைப்பூண்டி வழித்தடத்தில் சோழன் போக்குவரத்துக்கழகப் பேருந்து விடுதல்

***2001-திரு. வே. தம்புசாமி :**

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) திருவாரூர்—திருத்துறைப்பூண்டி மார்க்கத்தில் காலை 8 மணி முதல் 11 மணி வரை சோழன் போக்குவரத்து பேருந்து இல்லாததால் பொது மக்கள் அவதிப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அந்த நேரங்களில் பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): திருத்துறைப்பூண்டியிலிருந்து திருவாரூக்கு க்ச்சணம் வழியாக சோழன் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்துகள் மற்றும் புறநகர்ப் பேருந்துகள் மூலமாக காலை 8 மணி முதல் 11 மணி வரை 11 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூரிலிருந்து திருத்துறைப்பூண்டி செல்லக்கூடிய மார்க்கம் நெருக்கமான கிராமங்கள் வழியாகச் செல்லக்கூடிய மார்க்கமாகும். அந்த மார்க்கத்தில் திருவாரூருக்கு வர வேண்டுமென்று சொன்னால், பேருந்துகளில் இடம் இல்லாமல் மிகவும் கடுமையான நெருக்கடியிலே ஜனங்கள் தவிக்கிறார்கள். திருவாரூரிலே கல்லூரி இருக்கிறது, அரசினர் மருத்துவமனை இருக்கிறது. பெரிய திருக்கோயில் இருக்கிறது. இதுவன்னியில் ஒரு வியாபார ஸ்தலமாகவும் விளங்கக்கூடிய அந்தப் பகுதிக்கு கிராமப் புறங்களிலே இருந்து சிறு வியாபாரிகள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், கல்லூரி மாணவர்கள் அவ்வளவு பேரும் வந்து சேருவதில் சிரமம் இருக்கிறது. இப்படி தொடர்ந்து இட நெருக்கடி இருக்கிற காரணத்தால், தனியார் பேருந்தில் தொங்கிக் கொண்டு வந்த ஒருவர் கீழே விழுந்து இறந்தார்; தனியார் பேருந்திலே ஒருவர் மூச்சுத் திணறி இறந்தார். இப்படி நெருக்கடி அதிகமாக உள்ள பகுதியாக இருக்கிற காரணத்தால் காலை 8 மணி முதல் 10 மணி வரை அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், கல்லூரி மாணவர்கள் அல்லது அரசு மருத்துவ மனைக்கு வரக்கூடியவர்கள் வர முடியவில்லை. அந்தப் பகுதியிலே இப்போது சொல்லி இருக்கக்கூடிய நடைகள் என்பது இல்லை. இதற்கு முன்னாலே தொடர்ந்து மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே எல்லாம் எழுப்பப்பட்டு, மாவட்ட

[1994 மார்ச் 22

ஆட்சித்தலைவரே நேரடியாக தாசில்தாரை அனுப்பி இது உண்மையா என்று கேட்டு, அவசியம் பஸ் விடவேண்டுமென்று சோழன் போக்குவரத்துக் கழகத்துக்கு மாவட்ட ஆட்சித் தலைவரே கூறியும் கூட, அந்தப் பேருந்துகள் இயக்கப்படவில்லை. ஆகவே திருவாரூரிலிருந்து கச்சணம் வரையிலுமாவது, நகரப் பேருந்துகள் காலை 8 மணியில் இருந்து காலை 10 மணிக்குள் இரு தடவை இயக்கினால் இந்த நெருக்கடியைப் போக்கமுடியும். ஆகவே அமைச்சர் அவர்கள் அந்த இரண்டு தடவை பேருந்துகளை விரைவாக இயக்குவதற்கு ஆணை பிறப்பிக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 10—20

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, நெருக்கமான பகுதியாக இருக்கிறது. மக்கள் பல்வேறு இடங்களுக்குப் பயணம் செய்யவேண்டியிருக்கிறது என்ற கருத்தைச் சொன்னார்கள். திருத்துறைப்பூண்டியிலிருந்து திருவாரூருக்கு கச்சணம் வழியாகச் செல்கிற பேருந்துகள் ஏறத்தாழ 109 நடைகள் இயக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. தனியார் பேருந்துகள் 28 நடைகள் இயங்குகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது, காலை 8 மணி முதல் 10 மணி வரை கச்சணம் வழியாக பேருந்துகள் கூடுதலாகத் தேவை என்று கேட்டு இருக்கிறார்கள். அங்கே 11 நடைகள் இயங்கிக்கொண்டிருந்தாலும் அது போதாது என்று சொல்கிற காரணத்தாலே, மாண்புமிகு உறுப்பினர்கள் போன்றவர்கள், இங்கே பல்வேறு இயக்கங்களில் இருந்துகொண்டிருக்கிற முன்னணியில் இருக்கிற தலைவர்கள் எல்லோரும் காலை 8 மணி முதல் 11 மணி வரையிலும் பேருந்துகளை இயக்குவது எவ்வளவு கடினம் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். உதாரணமாக டெல்லி போன்ற இடங்களை எடுத்துக்கொண்டாலும் அங்கே காலை நேரங்களில் 7 மணிக்கே பள்ளிகள் ஆரம்பித்து விடுகின்றன. ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரையிலும், பள்ளிகளும் ஒரே நேரத்தில், வேலைக்குச் செல்பவர்களும் ஒரே நேரத்தில், மக்கள் பயணம் செய்வதும் ஒரே நேரத்தில் என்று இருப்பதால் தான், காலை 8 மணியிலிருந்து 11 மணி வரையிலும் மாலை 4 மணி முதல் 8 மணி வரையிலும் தொடர்ந்து ஒரே நேரத்தில் பயணம் செய்கிற காரணத்தால்தான், இதுபோன்ற நெருக்கடிகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. கூடுதலாகப் பேருந்துகள் விடவேண்டுமென்று சொன்னால், இப்போதே ஏறத்தாழ 16,000க்கும் மேற்பட்ட பேருந்துகளை நாம் இயக்கிக் கொண்டிருக்கின்ற நேரத்திலும் கூட, உங்களைப் போன்றவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றவேண்டும் என்று சொன்னால், கூடுதலாக 2000 பேருந்துகள் விட வேண்டிய நிலை ஏற்படும். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை

1994 மார்ச் 22]
அரசு பரிசீலிக்கும்.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற இந்த நடைகள் என்பது பழைய காலத்தில் இருந்தது. இப்போது பல இடங்களில் செல்லக்கூடிய பேருந்துகள் திடீர் திடீர் என்று நிறுத்தப்பட்டிருக்கின்றன. அப்படி நிறுத்தப்பட்ட பேருந்துகளைக் கூட இயக்கவில்லை. ஆகவே இதன் விளைவாகத்தான் அந்தப் பகுதியில் தொடர்ந்து நெருக்கடி ஏற்படுகிறது. ஒவ்வொரு நாளும் தொடர்ந்து பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இந்தப் பிரச்சினைகளை மாவட்ட ஆட்சித்தலைவரே பார்த்து தலையிட்டு மூன்று முறைகள் ஒப்பந்தமும் செய்யப்பட்டன. அப்போதும் கூட பஸ் விடவில்லை. ஆகவே திருவாரூரில் இருந்து கச்சணம் வரை 2 நடவை - காலையில் 2 நடவையும், மாலையில் 2 நடவையும் இயக்குவதன் மூலம் இந்த நெருக்கடிகளைப் போக்கமுடியும். இதனால் மக்கள் வரவேமுடியாத சிரமம் ஏற்படுகிறது. கல்லூரி மாணவர்கள், பள்ளி மாணவர்கள், கல்லூரிகளுக்கும் பள்ளிகளுக்கும் வந்து சேரவே முடியவில்லை. ஆகவே, பரிசீலிக்கிறோம் என்று சொல்வதை விட, பஸ் விடப்படும் என்ற வாக்குறுதியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, சில பேருந்துகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன என்றார்கள். என்ன காரணம் என்று சொன்னால், புயல், வெள்ளம் காரணமாக சாலைகள் பழுதடைந்து, இப்போது அந்தப் பாதைகள் சீரமைக்கப்பட்டதற்குப் பிறகு அனைத்துப் பேருந்துகளை இயக்குவதற்கும் நாம் நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறோம். சோழன் போக்குவரத்துக் கழகத்தில் உடனடியாக பஸ்கள் விடவேண்டுமென்றால் பழைய பேருந்துகள் இருக்கின்றன. அவைகளை இயக்கவே முடியாத நிலை இருக்கிறது என்று சுட்டிக்காட்டியவுடனேயே, 100 பேருந்துகளை வேறு வேறு போக்குவரத்துக் கழகங்களிலிருந்து எடுத்து உடனடியாக வழங்கப்பட்டு, இப்போது சீரமைக்கப்பட்ட எல்லா வழித்தடங்களிலும் சிறப்பாக அவைகள் இயங்கிக் கொண்டிருக்கின்ற நிலைமை நிலவிக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிடுகிறபோது, குறிப்பிட்ட அந்தப் பகுதிக்கு பேருந்துகளை கச்சணம் வழியாகக் கூடுதலாக இயக்கவேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அரசு உடனடியாகப் பரிசீலனை செய்து நடவடிக்கை மேற்கொள்ளும் என உறுதி அளிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 65, செல்வி கோ. மல்லிகா, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.